# “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்”: மாகாண நியமனதாரர் திட்டம் சர்வதேச மாணவருக்கான விபரம்

ஒன்டேரியோவின் தொழிற் சந்தைக்கு, குடிவரவாளர்கள் மதிப்பற்ற தகமைகளையும் அறிவாற்றலையும் கொணர்வதின் மூலம் மாகாணத்தின் பொருளாதாரத்தை வளர்ப்பதோடு ஒன்டேரியோவை உலகின் சிறந்த இடமாகத் தெரிவு செய்யவும் உதவுகின்றனர்.

கூட்டுப்பொது அரசும், மாகாண அரசும் குடிவரவில் முக்கிய அங்கங்களை வகிக்கின்றன. ஒன்டேரியோ அரசானது “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” திட்டம் மூலம் கூட்டுப்பொது அரசுக்கு நிரந்தர வதிவுரிமைக்கான தனிநபர் நியமனங்களைத் தெரிவு செய்யும். சகல கனேடிய நிரந்தர வதிவுரிமை விசாக்களும் கனேடிய அரசின் பிரஜாவுரிமை சக குடிவரவினால் (CIC) செயற்தொடர் செய்யப்பட்டபின் அங்கீகரிக்கப்படும்.

ஒன்டேரியோவின், பிரஜாவுரிமை சக குடிவரவு அமைச்சு, கனடாவில் இருக்கும் சர்வதேச மாணவர்களின் நிரந்தர வதிவுரிமை நிலைப் பெயர்ச்சிக் காலத்தை இலகுவாக்கி உள்ளது. அதற்கான கட்டாயத் தேவைகளாவன:

- நீங்கள் தகுதிபெறும் ஒரு கனேடிய கல்விநிலையத்தில், பட்டம் பெற்றவராகவோ அல்லது சான்றிதழ் அல்லது பட்டக்கல்வித் திட்டத்தின் இறுதித் தவணையில் பயில்பவராகவோ இருக்க வேண்டும். சில சான்றிதழ் திட்டங்களும் தகுதியுடையவையாகும் (உம்.: மேற்பட்டப்படிப்புச் சான்றிதழ்கள்)
- உங்கள் பாடத்திட்டத்தில் குறைந்தது பாதியையாவது கனடாவில் முடித்திருக்க வேண்டும்.
- **தேசிய தொழில் வகுப்பு அட்டவணையின்** A, B அல்லது O தகமைத் தரத்திற்கிணங்க நிரந்தர முழு-நேர வேலை வாய்ப்பு உங்களுக்கு இருக்க வேண்டும்.

“ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” விண்ணப்பச் செயற்தொடர் பின்வருமாறு:

**படிமுறை 1:** உங்களை வேலைக்கு அமர்த்த விரும்பும் வேலைவழங்குபவர், உங்கள் குறிப்பிட்ட வேலைக்கான இலவச முற்-பரிசீலனை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” இற்குச் சமர்ப்பிப்பார். வேலை வழங்குவோருக்கான முற்-பரிசீலனை விண்ணப்பப்படிவம் எங்கள் MCI இணையத்தளத்தில் கிடைக்கும். உங்கள் வேலைவழங்குபவர் அங்கீகரிக்கப்பட்டால் உங்களிடம் தருவதற்கான நியமன விண்ணப்பக் கோவையை அவர் பெற்றுக் கொள்வார்.

**படிமுறை 2:** இக்கோவையை நீங்கள் பூர்த்தி செய்து உரிய கட்டணத்துடன் “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” இற்கு சமர்ப்பிக்க வேண்டும். இக்கட்டணத்தை நீங்களோ அல்லது உங்கள் வேலை வழங்குபவரோ செலுத்தலாம்.

**படிமுறை 3:** எங்கள் முடிவை நாங்கள் எழுத்து மூலம் உங்களுக்கு அறிவிப்போம். அங்கீகரிக்கப்பட்ட நியமனதாரர் நியமனம் செய்யப்பட்ட 6 மாத காலத்திற்குள் நிரந்தர வதிவுரிமை அந்தஸ்திற்கு, கனேடிய பிரஜாவுரிமை சக குடிவரவிற்கு (CIC) விண்ணப்பிக்க வேண்டும்.

**படிமுறை 4:** CIC இனால் உங்கள் PR விண்ணப்பம் செயற்தொடரில் இருக்கும் போது, உங்களிடம் வேலை அனுமதிப் பத்திரம் இருக்குமானால் நீங்கள் வேலை செய்யத் தொடங்கலாம். மேற்பட்டப்படிப்பு வேலை அனுமதிப்பத்திரம் அல்லது “ஒன்டேரியோ

வாய்ப்புக்கள்” சார்ந்த வேலை அனுமதிப்பத்திரத்திற்கு நீங்கள் தகுதியுடையவராகலாம். தற்காலிக வேலை அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக மேலும் விபரங்களுக்குப் பின்வரும் CIC இணையத்தளத்தைப் பார்வையிடவும்: www.cic.gc.ca

இந்த ஆவணம் ஆங்கிலம், பிரெஞ்சு உட்பட 25 பல்வேறு மொழிகளில் கிடைக்கும். “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” சம்பந்தமான தகவல்களின் துல்லியத்தை நிச்சயப்படுத்த ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட்டாலும் வெளியீட்டின் பின் சில தகவல்கள் மாறியிருக்கக் கூடும். “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” பற்றி மேலும் அறிய, பிரஜாவுரிமை சக குடிவரவு அமைச்சின் (MCI), www.OntarioImmigration.ca என்ற இணையத்தளத்தை பார்வையிட்டு மேலும் மிகப்புதிய தகவல்களும், தகுதியுடமை மற்றும் விண்ணப்பச் செயற்தொடர் போன்றவற்றையும் அறிந்து கொள்ளலாம்.

“ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” இன் பத்திரங்கள் மற்றும் சேவைகள், MCI இணையத்தளத்தில் உள்ள விபரங்கள் உட்பட, ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் மட்டுமே கிடைக்கப்பெறும்.

நீங்கள் கேட்கக் கூடிய சில கேள்விகள்:

**1. கனேடிய உயர்கல்வி நிலையங்களுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் செல்லும் சர்வதேச மாணவர்கள் ஏன் “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” திட்டத்தின் பாகமாக இருக்கிறார்கள்?**

கனேடிய பயிற்சிபெற்ற திறமை மிகுந்த, கெட்டித்தனமான சர்வதேச மாணவர்களை நாம் தேடிக் கண்டு பிடித்து உலக பொருளாதாரத்திலே ஒன்டேரியோவை ஆரோக்கியமான முன்னணிக்குக் கொணர்தல்.

**2. NOC 0, A, B தகமைத் தரங்கள் என்றால் என்ன?**

NOC என்றால் தேசிய தொழில் வகுப்பு அட்டவணை (National Occupational Classification index) என்று பொருள்படும். தகமைத் தரங்கள் 0, A, B ஆவன நிர்வாகவியல், தொழிலியல் மற்றும் தகமைத்துறைப் பதவிகளாகும். “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” பரிசீலனை செய்யும் வேலைவழங்குவோர் விண்ணப்பங்களில், வேண்டப்படும் நியமனதாரர் பதவிக்குரிய திறமைத்தரம் முக்கிய அங்கம் வகிக்கிறது. பின்வரும் இணையத்தளத்தில் NOC வகுப்புக்கள் பற்றிப் பார்த்தறியலாம்: http://www23.hrdc-drhc.gc.ca/2001/e/generic/welcome.shtml

**3. நான் எனது இறுதித் தவணையில் படிக்கிறேன் - நான் விண்ணப்பிக்க முடியுமா?**

ஆம் - உங்களுக்கு ஒரு முழு-நேர நிரந்தர வேலை வாய்ப்பு இருக்குமானால், உங்கள் தற்போரைய வேலைவழங்குபவர் “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” செயற்தொடரை ஆரம்பிக்க விரும்பினால் செய்யலாம். உங்கள் இறுதித் தவணைக்கு முன் நீங்களாக விண்ணப்பிக்க முடியாது.

**4. நான் விண்ணப்பிக்க விரும்புகிறேன் ஆனால் வேலை வாய்ப்பு இன்னும் இல்லை - இருப்பினும் விண்ணபத்தை ஆரம்பிக்கலாமா?**

இல்லை - இத்திட்டத்திற்குத் தகுதிபெற உங்களுக்க ஒரு வேலைவாய்ப்பு இருக்க வேண்டும். உங்கள் வேலைவழங்குபவர் “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” செயற்தொடரை ஆரம்பிக்க வேண்டும். வேலைவாய்ப்பு இல்லாது நீங்கள் விண்ணப்பிக்க முடியாது.

**5. “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” நான் ஒரு வேலையைத் தேடிக்கொள்ள உதவுமா?**
வேலை தேடிக்கொள்ளவோ அன்றி ஒரு வேலைவழங்குபவரை இனம் காட்டவோ “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” உதவி செய்யாது. உதவிகளுக்கு உங்கள் பாடசாலை உத்தியோக சேவை நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

**6. நான் நினைக்கிறேன் எனது வேலை வழங்குபவர் இத்திட்டத்தை விரும்புவார் என்று – விண்ணப்பப் படிவங்களை எங்கு பெற்றுக்கொள்ளலாம் என நான் அவர்களிடம் கூறலாம்?**
வேலைவழங்குவோர் தமக்குத் தேவையான தகமைபெறும் ஊழியரை தேடிக்கொள்ள “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” உதவுகிறது. ஒரு வேலைவழங்குபவரை அணுக முன் திட்டத்தைப் பற்றி நீங்கள் நன்கு புரிந்து கொள்வதோடு வேலைவழங்குபவரின் கேள்விகளுக்கு உங்களால் பதிலளிக்க முடியும் என்ற திட நம்பிக்கையும் இருக்க வேண்டும். எதிர்கால வேலைவழங்கவோருக்கான தகவல்களை பின்வரும் இணையத்தளத்தில் மீள் பார்வையிடுங்கள்:
www.ontarioimmigration.ca/en/pnp/OI_PNPEMPLOYERS.html

**7. ஒரு வருட வேலை அனுபவம் எனக்கு உள்ளதென நான் நிரூபிக்க வேண்டுமா?**
இல்லை, இத்திட்த்திற்கத் தகுதி பெற உங்களுக்கு வேலை அனுபவம் தேவையில்லை. மொழிப் பரீட்சைசெய்யவோ அல்லது கூட்டுப்பொது அரசின் குடிவரவுப் புள்ளித்திட்ட ஒழுங்கமைப்பிலோ நீங்கள் தகுதி பெறத் தேவையில்லை.

**8. உயர் பள்ளிச் சமான பாடத்திட்டத்தை ஒரு மேல்நிலைப்பள்ளியில் கற்பதற்காக நான் சேர்ந்திருந்தால், “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” இற்கு நான் விண்ணப்பிக்கத் தகுதி உடையேனா?**
இல்லை. உயர்பள்ளிச் சமானப் பாடத்திட்டத்திலோ அன்றி பல்கலைக்கழகத் தயார் பாடத்திட்டத்திலோ சேர்ந்திருக்கும் தனிநபர்கள் “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” இற்கு தகுதியுடையவர்களாக மாட்டார்கள். பொதுநிதி ஆதாரத்தில் இயங்கும் அதி-உயர் கல்விநிலையங்களில் நீங்கள் சேர்ந்திருந்து அங்கிருந்து நீங்கள் சான்றிதழோ, பட்டமோ பெறுவதாக இருக்க வேண்டும்.

**9. என்னென்ன சான்றிதழ், பட்டம் அல்லது பட்டப் படிப்புத்திட்டங்கள் “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” இன் சர்வதேச மாணவர் பிரிவிற்குத் தகுதியுடையவையாகின்றன?**
தகுதிபெற்ற கனேடிய உயர்நிலைக் கல்விநிலையத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் குறைந்த பட்சம் இரண்டு-வருட சான்றிதழ் அல்லது பட்டப்படிப்புத் திட்டத்தில் முழு-நேரக் கல்வி பயின்று முற்றுச் செய்த சர்வதேச மாணவர்கள், அங்கீகாரம் பெற்ற வேலை வாய்ப்பு இருக்குமானால் “ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” இற்கு விண்ணப்பம் செய்யலாம். ஒரு-வருட அதி-உயர் பட்டப்படிப்புத்தரம், பட்டம் மற்றும் பட்டச்சான்றிதழ் அல்லது பட்டத்தகமை தேவைப்படும் சான்றிதழ் கல்வித் திட்டங்கள் போன்றவையும் தகுதி உடையவையாகின்றன. பகுதி-வேளைப் படிப்புகள், ஆரம்பத்தரம் அல்லது உயர்நிலைத் தயார் சான்றிதழ் திட்டங்கள் தகுதியுடையவை ஆக மாட்டா. தகமைத்துறைச் சான்றிதழ் திட்டங்களும் தொடர்கல்வித் திட்டங்களும் தனித்தனி நிலை அடிப்படையில் படித்தாராயப்படும்.

**10. நான் தகுதியுள்ள சர்வதேச மாணவர் என்று நிரூபிக்க எனது குடிவரவு நிலை என்னவாக இருக்க வேண்டும்?**
“ஒன்டேரியோ வாய்ப்புக்கள்” இற்கு விண்ணப்பம் செய்யும் சகல மாணவர்களும் செல்லுபடியாகும் கல்வி அனுமதிப் பத்திரம், அல்லது பட்டம் பெற்ற இரண்டு வருடத்திற்குள் விண்ணப்பிப்பதாயின் முன்னைய கல்வி அனுமதிப்பத்திரம் மற்றும்-அல்லது

தற்போதைய பட்டப் பேற்றின் பின்னான வேலை அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும்.

**11.** **முழு-நேர நிரந்தர வேலையாகக் கருதப்படுவது எது?**
நிரந்தர வேலைவாய்ப்பானது முடிவு திகதி வரையறுக்கப்படாத, குறிப்பிட்ட பதவியில் தொடர்ச்சியான நிரந்தர வேலையாகும். "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" சர்வதேச மாணவருக்கான ஒரு வருட, புதுப்பிக்கக் கூடிய ஒப்பந்தங்களை தனித்தனி நிலை அடிப்படையில் படித்தாராயும்.

ஒரு முழு-நேர வேலையானது 12 மாத காலத்தில் 1,560 மணித்தியாலங்கள் ஊதியத்துடன் கூடிய வேலையாகும். பின்வருவன 12 மாத காலத்தில் நீங்கள் 1560 மணித்தியாலங்கள் வேலை செய்தாலும் முழு-நேர வேலையாகக் கருதப்படாது:

- காலத்துக்குக் காலம், சுழற்சி முறை அல்லது பகுதி-நேர வேலைகள், எத்தனை மணி நேரம் வேலை செய்யப்பட்டது என்றாலும்,
- உப-ஒப்பந்ததாரர் அல்லது பிரதிநிதித்துவ ஊழியர்கள்,
- நிறுவன ஸ்தானத்தில் வேலை பார்க்காதவர்கள், அதாவது வீட்டில் இருந்த வண்ணமே வேலை செய்பவர்கள், அல்லது வேறு இடங்களில் இருந்த வண்ணம் வேலைவழங்குவோருக்கு தொலைத்தொடர்பு மூலம் ஊழியம் செய்பவர்கள்.

**12. "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" இற்குத் தகுதி பெற, எனது பதவி அல்லது தகமைத்துறை முறைப்படுத்தப்பட்டால் அல்லது ஒன்டேரியோவின் உறுதிப்படுத்துதல் தேவைப்படும் பட்சத்தில் முறைப்படியான பதிவு அல்லது தொழில்துறை உறுதிப்படுத்தலை நான் பெற்றுக்கொள்வது அவசியமா?**
ஆம். "ஒன்டேரியோ வாய்ப்புக்கள்" இற்குத் தகுதிபெற, உங்கள் உத்தேசித்த தொழில் முறைப்படுத்தப்பட்டதாய் இருந்தாலோ அல்லது ஒன்டேரியோவின் உறுதிப்படுத்தல் தேவைப்பட்டாலோ, நீங்கள் முறைப்படியான பதிவை அல்லது தொழிற்துறை உறுதிப்படுத்தலைப் பெற வேண்டும். ஒன்டேரியோவில் பல முறைப்படுத்தப்பட்ட தொழில்களும், தொழிற்துறைகளும் உள்ளன. இத்தொழில்கள் பற்றிய விபரங்களுக்குத் தயவு செய்து எங்கள் **பிரயோசனம் மிக்க இணையத்தளப் பகுதிகளைப்** பார்வையிடவும்.

சில தகமைத் துறைகளுக்கு உறுதிப்படுத்துதல் சில சமயங்களில் தன்னிச்சையாக இருக்கலாம் அல்லது கட்டாயமாகவும் இருக்கலாம் என்பதைத் தயவு செய்து கவனிக்கவும். உங்கள் தகமைத்துறைக்குக் கட்டாய உறுதிப்படுத்துதல் தேவைப்படும் பட்சத்தில் மட்டுமே ஒன்டேரியோ வாய்ப்புக்கள் உறுதிப்படுத்தல் சான்றிதழைக் கேட்கும். உங்கள் தகமைத்துறைக்கு அத்தியாவசிய அல்லது தன்னிச்சையான சான்றிதழ் தேவையா என்பது பற்றி அறிய, தயவு செய்து பின்வரும் **தொழில்-பயிற்சி, உயர்கல்வி நிலையம் மற்றும் பல்கலைக்கழக அமைச்சு (Ministry of Training, Colleges and Universities)** இற்குரிய இணையத்தளத்தில் பார்வையிடலாம்:
www.edu.gov.on.ca/eng/tcu/employmentontario/training/certification.html

**13.** **வேலைவாய்ப்புக் கடிதத்தில் என்னென்ன சேர்க்கப்பட வேண்டும்?**
வேலை வாய்ப்புக் கடிதத்தில் உங்கள் பதவியின் பெயர், கொடுக்கப்பட இருக்கும் ஊதியம், உங்கள் தொழில் கருமங்கள், வேலை செய்யும் இடம் போன்றவையோடு இவ்வேலை முழு-நேர நிரந்தரமானதா என்றும் குறிப்பிட வேண்டும்.